# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 135/மா/2018

நாள் : 19/06/2018

**திரு ஐசக் இம்மானுவேல்,**
**வளசரவாக்கம்.** – முறையீட்டு மனுதாரர்

**செயற்பொறியாளர்,**
**மண்டலம் – 11,**
**சென்னை மாநகராட்சி.** – எதிர் மனுதாரர்

சென்னை, வளசரவாக்கம், ஸ்ரீதேவி கருமாரி அம்மன் நகர், 19, நாகிரெட்டி தெரு முகவரியில் வசிக்கும் திரு A. ஐசக் இம்மாமனுவேல் அவர்களின் முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 135/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு சம்பந்தமாக எதிர் மனுதாரரும், 11–வது மண்டல செயற்பொறியாளருமான திரு பி. பானுகுமார் அவர்களின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## <u>ஆணை</u>

சென்னை, வளசரவாக்கம், ஸ்ரீதேவி கருமாரி அம்மன் நகர், 19, நாகிரெட்டி தெரு முகவரியில் வசிக்கும் திரு A. ஐசக் இம்மாமனுவேல் என்பவரிடமிருந்து 11–வது மண்டல மாநகராட்சி செயற்பொறியாளர் திரு பி.பானுகுமார் என்பவர் மீதான குற்றச்சாட்டுகளுக்காக அவரைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்து துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்திற்கு 31.10.2017 அன்று வரப்பெற்றது.

2. முறையீட்டு மனுதாரரின் மனுவில் அவரது முகவரி குறிப்பிடப்படவில்லை. எனினும், அஞ்சலக உறையில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரிக்கு முறையீட்டு மனுதாரருக்கு விசாரணைக்கான அழைப்பாணை அனுப்பப்பட்டது. 24.01.2018 நாளன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு மனுதாரர் வராத நிலையில் மீண்டும் 16.04.2018 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு வருகை தருமாறு ஆணையிடப்பட்டது. எனினும், மேற்குறிப்பிட்ட நாளுக்கான விசாரணை அழைப்பாணை கடிதம் அஞ்சல் துறையினரால் மனுதாரருக்கு வழங்கப்படாமல் “Left” எனக் குறிப்பிட்டு மீண்டும் இம்முறைமன்ற நடுவத்திற்கே திருப்பப்பட்டு விட்டது. எனவே, முறையீட்டு மனுதாரர் தவறான முகவரியினைக் குறிப்பிட்டு முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்பது உறுதியாகிறது.

3. எனினும், செயற்பொறியாளர் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து அவரது அறிக்கையும் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. அவர் தனது அறிக்கையுடன் 17.11.2016 நாளிட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மன்ற நகரச் செயலாளர் திரு T.P.தமிழ் அன்பரசு அவர்களின் கடிதம் மற்றும் நடைபாதையை ஆக்கிரமிக்கும் கடைகள் என்று தினமலர் நாளிதழில் வெளியிடப்பட்டிருந்த 23.11.2016 நாளிட்ட செய்தித் துணுக்கினையும், பிற ஆவணங்களையும் சமர்ப்பித்திருந்தார். வளசரவாக்கம் மண்டலம், ஸ்ரீதேவிக்குப்பம் பிரதான சாலை நடைப்பாதையை ஆக்கிரமித்து கட்டப்பட்ட கடைகள் உள்ள நிலங்களை நில அளவை செய்து தரக்கோரி 19.09.2016 நாளிட்ட கடிதத்தில் 11–வது மண்டல செயற்பொறியாளர் மதுரவாயல் வட்டாட்சியரைக்

கோரியுள்ளார். இதனைத் தொடர்ந்து 27.06.2017 நாளிட்ட அலுவலகக் குறிப்பில் மேற்குறிப்பிட்ட ஆக்கிரமிப்பினை அகற்ற ஆணை வேண்டி மாநகராட்சி ஆணையருக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மாநகராட்சி சட்ட அலுவலரும் 15.09.2017 நாளிட்ட தனது குறிப்பில் நடவடிக்கை எடுக்க தடை எதுவும் இல்லை என்ற குறிப்பினையும் பதிவு செய்துள்ளார். இதனைத் தொடர்ந்து வட்டாட்சியர் நில அளவை வரைபடத்தின் அடிப்படையில் கள ஆய்வு செய்து 22 கட்டடங்களில் 58 ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. அக்கட்டடங்களில் செயல்பட்டு வந்த 37 கடைகள் மற்றும் 21 குடியிருப்புகள் ஆக மொத்தம் 58 நபர்கள் ஆக்கிரமித்து அனுபவித்து வந்துள்ளனர். 28.10.2017 நாளன்று 44 நபர்களின் ஆக்கிரமிப்புகளும் 01.12.2017 அன்று 13 நபர்களின் ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டு விட்டன என செயற்பொறியாளர் குறிப்பிட்டுள்ளார். ஒரே ஒரு நபர் ஆக்கிரமிப்பு கட்டடம் மட்டும் அகற்றப் படவில்லையென்றும், அது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

4. எதிர்மனுதாரரும், 11–வது மண்டல செயற்பொறியாளருமான திரு பி. பானுகுமார் அவர்கள் 2016–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலேயே மேற்குறிப்பிட்ட நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கையினைத் தொடங்கி 28.10.2017 அன்று 44 நபர்களின் ஆக்கிரமிப்புகளையும் மீதமிருந்த 14 ஆக்கிரமிப்புகளில் 13 ஆக்கிரமிப்புகளை 01.12.2017 அன்றும் அகற்றியுள்ளார். 44 கடைகள் அகற்றப்பட்ட பின்பே மனுதாரர் 2017–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இறுதியில் இம்முறைமன்ற நடுவத்தில் மனுச் செய்துள்ளார். எனவே, முறையீட்டு மனுதாரர் ஆக்கிரமிப்புதாரர்களில் ஒருவராக இருக்கக் கூடும் எனவும் கருதநேரிடுகிறது. பொது நலனில் அக்கறை கொண்டு முறையீட்டு மனுதாரர் முறையீடு செய்திருப்பாரேயானால் சரியான முகவரியைக் குறிப்பிட்டு விசாரணைக்கு வந்திருப்பார். சரியான முகவரி தெரிவித்து முறையீடு மனு தாக்கல் செய்யப்படவில்லை. அழைப்பாணை அஞ்சல் துறையினரால் “Left” என்று எழுதப்பட்டு திரும்ப வரப்பெற்றுள்ளது. எனவே, முறையீட்டு மனுதாரரின் மனு ஆதாரமற்றது எனக் கருதி, அம்மனுவினை நிராகரித்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 19–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு பி. பானுகுமார்,
   செயற்பொறியாளர்,
   மண்டலம் – 11,
   சென்னை மாநகராட்சி,
   எண்.33, ஆற்காடு சாலை,
   வளசரவாக்கம், சென்னை – 87.

2. மாநகராட்சி ஆணையர்,
   சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் கட்டிடம், சென்னை – 600 003.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்